

தேவி கூறினாள்:

"தேவர்களுக்கெல்லாம் தலைமையானவரே! மஹாதேவனென்னும் திருநாமம் பூண்டவரே! முக்காலங்களையும் (நடந்தது, நடப்பது, நடக்கப்போவது) அறிந்தவரே! தேவர்களுக்கெல்லாம் ஈசுவரரே! கருணைக்கடலே! பக்தர்களுக்கு அனுக்கிரகத்தைச் செய்பவரே! தேவர்களுக்கும் ஈசுவரனான பரமசிவனே! ஸ்ரீலக்ஷ்மியின் அஷ்டோத்தரசதநாம ஸ்தோத்திரத்தை உள்ளபடி கேட்க விரும்புகிறேன்." என்று பார்வதிதேவி பரமசிவனை வணங்கிக் கேட்கலானாள்.

ஈசுவரன் சொல்லுகிறார்:

மஹாபாக்யமுள்ள தேவியே! நன்றாகக் கேட்டாய். ஸகலமான பெரிய பாக்யங்களை அளிப்பதில் முதன்மையானதும், எல்லா ஐசுவர்யங்களையும் தரவல்லதும், புண்யத்தைக் கொடுப்பதும், எல்லா பாபங்களையும், எல்லாவிதமான தரித்ரத்தன்மையையும் போக்குவதும். கேட்பதனால் மாத்திரம் இவ்வுலகில் போகத்தையும் முக்தியையும் தரவல்லதும், மன்னர்களை வசம் பண்ணக்கூடியதும், திவ்வியமானதும், ரஹஸ்யங்களுக்குள் ரஹஸ்யமானதும், ஸர்வ தேவர்களுக்கும் ஸுலபமாய்க்கிடைப்பதற்கு அரியதும், அறுபத்திநான்கு கலைகளுக்கு இருப்பிடமானதும், *பத்மம் முதலாய் வரத்தை முடிவாக உடைய ஒன்பது நிதிகளையும் அழிவில்லாமலிருக்கும்படி கொடுப்பதும், எல்லாத் தேவர்களாலும் படிக்கக்கூடியதும், அணிமை முதலிய எட்டு சித்திகளையும் தரவல்லதும், இதில் பல சொல்லியென்? லக்ஷ்மியை ஸாக்ஷாத்கரிக்கும்படி செய்வதுமான லக்ஷ்மி அஷ்டோத்தரசதநாம ஸ்தோத்திரத்தை உன்னிடம் வைத்திருக்கும் பரம ப்ரீதியினால் சொல்லுகிறேன். வேறிடம் மனதைப் போகவிடாமல் கேட்பாயாக - என்று பரமசிவன் சொன்னார்.

(*1.மஹாபத்மம், 2. பத்மம், 3. சங்கம், 4.மகரம், 5. கச்சபம், 6.முகுந்தம். 7. கந்தம், 8. நீலம், 9. வரம் என்று ஒன்பது நிதிகளுக்கும் பெயர். 'வரம்' என்பதை 'வாரம்' என்றும், வர்ச்சம் என்றும் சில புராணங்களில் சொல்லியிருக்கிறது. மார்க்கண்டேய புராணத்தில் எட்டு நிதிகளை மாத்திரம் சொல்லி, அவைகளுக்கு சாத்விக, தாமஸ, ராஜஸபேதங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.)

இந்த லக்ஷ்மி அஷ்டோத்தரசதநாம ஸ்தோத்திரத்துக்கு ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவதை. க்லீம் பீஜம், புவனேச்வரி சக்தி, ச்ராம் என்பது முதலானவை அங்கந்யாஸம், கரந்யாஸம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

த்யானம்

தாமரைப்பூவைத் திருக்கையில ஏந்தியவளும், ப்ரஸன்னமான திருமுகமண்டலத்தை உடையவளும், ஸௌபாக்கியத்தையும் பாக்கியத்தையும் அளிப்பவளும், இரு கரங்களாலும் அபயமளிப்பவளும், பல வித ரத்நங்களால் அலங்கரிக்கப்பட்டவளும். இந்திரன், ஹரன், சதுர்முகன்,இவர்களால் சேவிக்கப்பட்டவளும், தாமரை, சங்கநிதி, பத்மநிதி இவைகள் பக்கங்களில் இருக்கப்பெற்றவளும். தனது ஏழு சக்திகளுடன் எப்போதும் கூடியவளுமான ஸ்ரீமஹாலக்ஷ்மியை நான் வணங்குகிறேன். (1)

தாமரைப்பூவினையொத்த திருக்கண்களுடையவளே! தாமரையைத் திருக்கைகளில் தரிப்பவளே! மிகவும் வெண்மையான வஸ்த்ரம், சந்தனம், புஷ்பமாலை, இவைகளை அணிந்து விளங்குபவளே! ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸு என்ற ஆறு குணமுள்ளவளே! விஷ்ணுவின் அன்புக்கு உகந்தவளே! எல்லாருடைய மனதையும் வசீகரிக்கும்படியானவளே! மூவுலகுக்கும் ஐச்வர்யத்தைத் தருபவளே! என்னிடத்தில் கிருபை செய்வாயாக!

**ப்ரக்ருதிம்**

ப்ரக்ருதி என்ற அசேதன தத்துவத்துக்கு அபிமாநி தேவதை என்று பொருள். மஹத் முதலான காரியங்களை உண்டுபண்ணுவதால் ப்ரக்ருதி என்று பெயர்.

# मत्तः प्रक्रियते विश्वं प्रकृतिश्चास्मि कीर्तिता

மத்த: ப்ரக்ரியதே விச்வம் ப்ரக்ருதிச்சாஸ்மி கீர்த்திதா
(என்னிடமிருந்து இவ்வுலகம் செய்யப்படுவதால் ப்ரக்ருதி என்று நான் சொல்லப்படுகிறேன்.)
என்று லக்ஷ்மீ தந்த்ரம் பாஞ்சராத்ர ஸம்ஹிதையில் 4-வது அத்யாயத்தில் ((5)-சுலோகம்)
லக்ஷ்மியே சொல்லுகிறபடியால் ப்ரக்ருதி என்று லக்ஷ்மிக்குத் திருநாமம்.

## जगदुत्पादिता शक्तिस्तव प्रकृतिरिष्यते ।

## सैव नामसहस्रैस्तु लक्ष्मीः श्रीरिति कीर्त्यते ॥

(பகவானே! ஜகத்தையுண்டாக்கும் தேவரீரது சக்திதான் ப்ரக்ருதி என்று சொல்லப்படுகிறது. அந்த சக்திதான் ஆயிர நாமங்களால் லக்ஷ்மியென்றும் ஸ்ரீயென்றும் சொல்லப்படுகிறது) என்று ப்ரம்மபுராண வசனத்துக்கும், "மூலப்ரக்ருதி" என்று லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமத்திலுள்ள திருநாமத்துக்கும், ப்ரக்ருதிக்கு அபிமானதேவதை என்றுதான் பொருள் என்று "விபூதிவிசேஷாபிமாநித்வாபிப்ராயாணி" என்று ஸ்ரீதேசிகன் ஸ்ரீசதுச்லோகீ பாஷியத்தில் அருளிச்செய்திருக்கிறார். 1

**விக்ருதிம்**

ப்ரக்ருதியிலிருந்து உண்டாகும் மஹத் முதலான விகாரங்களும் லக்ஷ்மியின் அனுப்ரவேசத்தால் உண்டாகிறபடியால் லக்ஷ்மியே விக்ருதி எனப்படுகிறாள்.

## महान्तमाविशाम्येनं प्रेरयामि स्वसृष्टये

""மஹந்தமாவிசாம்யேநம் ப்ரேரயாமி ஸ்வஸ்ருஷ்டயே"
என்று லக்ஷ்மீ தந்த்ரத்தில் 5-வது அத்யாயத்தில் (44-சு) சொல்லியிருக்கிறது. 2

**வித்யாம்**

ஸகல வித்யாஸ்வரூபமாயிருப்பவள். "லக்ஷ்ம்யாம் ச வித்யா சப்த: - வித்யாப்ரவர்த்தநத்வாத்" என்று ஸ்ரீதேசிகன் ஸ்ரீசதுச்லோகீ பாஷியத்தில் அருளிச்செய்திருக்கிறார். ஸகல வித்யைகளையும் ப்ரவர்த்திப்பித்தவள் - என்றும் சொல்லலாம். 3

**ஸர்வபூதஹிதப்ரதாம்**

எல்லாப் ப்ராணிகளுக்கும் நன்மையைக்கொடுப்பவள். 4

**ச்ரத்தாம்**

ச்ரத்தையென்று லக்ஷ்மிக்குப் பெயர் என்பது "மேதா ச்ரத்தா ஸரஸ்வதீ" என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் இந்திரனால் செய்யப்பட்ட ஸ்ரீஸ்துதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ச்ரத்தாஸூக்தம் யஜுர்வேதத்தில் காடகத்திலும். 2-வது அஷ்டகத்திலுமிருக்கிறது. ச்ரத்தாஸூக்தமானது லக்ஷ்மியின் மஹிமையைப் ப்ரதிபலிக்கிறது என்று "ச்ரத்தாஸூக்த............ வாக்ஸூக்தாதிஷு... ஏதந்விபூதிப்ரதிபாதேஷு...... ஏதத் மஹிமாந: தத்தத் பாஷியகாராய: ப்ரபஞ்சிதா: ப்ரதிபத்தவ்யா: " என்று ஸ்ரீதேசிகன் ஸ்ரீசதுச்லோகீ பாஷியத்தில் அருளிச்செய்திருக்கிறார். ஸ்ரீபாரதத்தில் சாந்திபர்வத்தில் லக்ஷ்மீ இந்திரஸம்வாதத்தில் லக்ஷ்மி தானே "அஹம் ச்ரத்தா ச மேதா ச" என்று சொல்லியிருக்கிறாள். 5

**விபூதிம்**

ஐச்வர்யத்துக்கு அபிமாநி தேவதையாயிருப்பவள். பாரதத்தில் லக்ஷ்மீ வாஸவ ஸம்வாதத்தில் ஆசை, ச்ரத்தை, த்ருதி (தைர்யம்), க்ஷாந்தி (பொறுமை), விபூதி, ஸந்நதி(வணக்கம்), பூமி ஆகிய இந்த ஏழு தேவி (சக்தி)களுடன்) நானிருப்பேன்- நான் தலைவி என்று சொல்லப்பட்டிருக்கிறது. 6

**ஸுரபிம்**

வேண்டியவருக்கு வேண்டியதெல்லாம் தரும் காமதேநு ஸ்வரூபமாயிருப்பவள். 7

**பரமாத்மிகாம்**

பரமாத்ம ஸ்வரூபமாயிருப்பவள். எப்படி பகவான் பரமாத்மாவோ, அப்படியே லக்ஷ்மியும் பரமாத்மாதான். 'யதா ஸர்வகதோ விஷ்ணு: ததா ஏவ இயம் த்விஜோத்தம' என்று ஸ்ரீ விஷ்ணுபுராணாத்தில் விஷ்ணு எப்படி எங்கும் வியாபித்திருக்கிறாரோ, அப்படியே இவளும் என்று சொல்லியிருக்கிறது. (நமாமி) இப்படிப்பட்ட ஸ்ரீ மஹாலக்ஷ்மியை நமஸ்கரிக்கிறேன். இப்படி ஒவ்வொரு நாமாவிலும் நமஸ்கரிக்கிறேன் என்பதைச் சேர்த்துக்கொள்ளவும். 8

**வாசம்**

வாக்தேவியான ஸரஸ்வதியாயிருப்பவள். வாக்ஸூக்தத்தின் தேவதை இவளே. “அர்த்தோ விஷ்ணுரியம் வாணீ” என்று விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருக்கிறது. 9

**பத்மாலயாம்**

தாமரையை வீடாக உடையவள். ‘பத்மே ஸ்திதாம்: என்பது ஸ்ரீஸூக்தம். 10

**பத்மாம்**

எல்லாராலும் பூஜிக்கப்படுகிறவள். தாமரை வாஸஸ்தலமாகையால் பத்மையென்று பெயர். “புனச்ச பத்மா ஸம்பூதா ஹ்யாதித்யோபூத் யதா ஹரி:” (வாமநநாக ஹரி அவதாரம் செய்தபோது பத்மா- என்ற திருநமமுள்ளவளாக இவள் அவதரித்தாள் ) என்று விஷ்ணுபுராணத்தில் சொல்லியபடி பத்மையென்ற அவதாரத்தைச் சொன்னதாகவும் சொல்லலாம். “ஆதித்ய: வாமந:: என்று ஸ்ரீதரீயம். 11

**சுசிம்**

பரிசுத்தமானவள். 12

**ஸ்வாஹாம்**

அக்நிக்குப் பத்திநியான ஸ்வாஹாதேவியாயிருப்பவள். 13

**ஸ்வதாம்**

பித்ருக்களுக்குப் பத்னியான ஸ்வதா தேவியாக இருப்பவள். “ஆநீத் அவாதம் ஸ்வதயா ததேகம்“என்ற வேதத்திலுள்ள ஸ்வதா சப்தம் லக்ஷ்மியைக் குறிக்கிறது என்று ச்ருதப்ரகாசிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. “அஹம் ஸ்வாஹா ஸ்வதா சைவ” என்று மஹாபாரதத்தில் லக்ஷ்மீ வாஸவ ஸம்வாதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. லக்ஷ்மியினால் அந்த ப்ரஹ்மம் ப்ராணனோடு இருக்கிறது என்று அர்த்தமுள்ள அந்த ச்ருதிக்கு அவளின் ப்ரீதிக்கு வசப்பட்டிருப்பதில் தாத்பர்யம் என்று ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தார். 14

**ஸுதாம்**

அம்ருதம் போலினிமையாயிருப்பவள். அம்ருதமாயிருப்பவள். “த்வம் ஸித்தி: ஸ்வாஹா ஸ்வதா த்வம் லோகபாவனீ” என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும் இந்திரஸ்துதியிலும், “ஸ்வாஹா லக்ஷ்மீ: பத்மா ஸ்வதா ” என்றவிடத்திலும் காண்க. 15

**தந்யாம்**

தநம் படைத்தவள். 16

**ஹிரண்மயீம்**

தங்கம் முதலான எல்லாத் தநங்களாலும் நிறைந்தவள். லக்ஷ்மியின் திருவடியின் கீழ் சங்கநிதி, பத்மநிதி என்ற இரண்டு நிதிகளும் எப்போதுமிருந்து அதிகமான தநத்தைப் பெருக்குகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. 17

**லக்ஷ்மீம்**

எல்லாராலும் ப்ரார்த்திக்கப்படுகிறவள். அல்லது சர்வேச்வரீ என்பதற்குத் தகுந்த லக்ஷணமுடையவள் என்று சொல்லலாம். எல்லாவற்றையும் பார்க்கிறவள் என்றும் சொல்லலாம்.

**நித்யபுஷ்டாம்**

எப்போழுதும் எல்லா வஸ்துக்களாலும் நிறைந்தவள். அல்லது நித்தியங்களான குணங்களாலும் விபூதிகளாலும் நிறைந்தவள். 19

**விபாவரீம்**

இராத்திரி ஸ்வரூபமாயிருப்பவள். “விபாவரீ ச்ரீ:” என்பது விஷ்ணுபுராணம். 20

**அதிதிம்**

இல்லையென்றும் இவ்வளவுதான் என்றும் சொல்ல முடியாத ஸ்வரூபம், குணம், விபவம்-இவைகளையுடையவள். அதிதி என்று பூமிக்குப் பெயர். அவள் ஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம். அதிதி ஸூக்தமும் லக்ஷ்மியின மஹிமையை வெளியிடுகிறது. தேவமாதாவான அதிதியை வஹிக்குமவள் என்றும் சொல்லலாம். 21

**திதிம்**

அஸுர மாதாவான திதியை நிர்வஹிப்பவள். 22

**தீப்தாம்**

லாவண்யமயமான தனது தேஜஸால் எல்லா உலகங்களையும் பிரகாசிக்கச் செய்பவள். ” ஜ்வலந்தீம் தேஜஸா ஸ்வேந ஸா மே தேவீ ப்ரஸீதத” , ஆச்ரிதர்களுக்கு அநுகூலமாயும், அநாச்ரிதர்களுக்குத் தாபகரமாயுமுள்ள ஜ்யோதிஸ் ஸ்வரூபமாயிருப்பவள் என்றும் சொல்லலாம்.

**வஸுதாம்**

தநங்களைப் போஷிப்பவளான பூமி ஸ்வரூபமாயிருப்பவள். 24

**வஸுதாரிணீம்**

தநங்களைத் தரிப்பவள். 25

**கமலாம்**

எல்லாராலும் விரும்பப்படுபவள். 26

**காந்தாம்**

அழகியவள். "க்ஷாந்திம்" என்ற பாடாந்தரத்தில் பொறுமையாயிருப்பவள் என்பது பொருள். க்ஷாந்திதேவி என்பவள் லக்ஷ்மியின் பரிவார தேவதைகளில் ஒருவள் என்பது லக்ஷ்மீ வாஸவஸம்வாதத்தில் காண்க. 27

**க்ஷமாம்**

பூமியாயிருப்பவள். 28

**க்ஷீரோதஸம்பவாம்**

திருப்பாற்கடலில் அவதரித்தவள். 29

**அநுக்ரஹபராம்**

அநுக்ரஹிப்பதையே ஸ்வபாவமாக உடையவள். "அநுக்ரஹபதாம்" என்ற பாடத்தில் அநுக்ரஹத்துக்கு இருப்பிடமானவள் என்பதும், " அநுக்ரஹப்ரதாம்" என்ற பாடத்தில் அநுக்ரஹத்தையளிப்பவள் என்பதும் பொருள். அநுக்ரஹத்தைத் தவிர்த்து நிக்ரஹம் என்பதே இவளிடத்தில் இல்லையென்றபடி. "நித்யம் அஜ்ஞாத நிக்ரஹாம்" என்றாரிறே ஸ்ரீதேசிகன், "ஸதா அநுக்ரஹ ஸம்பந்நா ஸா மே தேவீ ப்ரஸீதது"என்று மங்கண ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறது. 30

**புத்திம்**

புத்தி (அறிவு) ஸ்வரூபமாயிருப்பவள். 'போதோ" விஷ்ணுரியம் புத்தி:" என்பது ஸ்ரீ விஷ்ணுபுராணம். பொருளைப் பிரகாசிப்பது போதம்; அதைத் தெளிவுபடுத்தும் சக்தி புத்தி என்று ஸ்ரீதரீயம். அத்யவஸாயம் என்ற அந்தக்கரணம்- புத்தி, அதினாலுண்டாகும் நிச்சயம் போதம் - என்று ஸ்ரீவிஷ்ணுசித்தீயம். அதாவது இதைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற மந:ப்ரவ்ருத்தி புத்தி. மற்றதை விட்டு இதைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற நிச்சயம் போதம். 'ருத்திம' என்ற பாடம் சதுச்லோகீ பாஷியத்தில் காணப்படுகிறது. அப்போது ஸ்ம்ருத்தியாயிருப்பவள் என்று பொருள். 31

**அநகாம்**

ஒருவிதமான குற்றமுமில்லாதவள். 32

**ஹரிவல்லபாம்**

ஸ்ரீநாராயணனுக்குப் பிரியமானவள், 33

**அசோகாம்**

ஒருவிதமான சோகமும் (வருத்தமும்) இல்லாதவள். 34

**அம்ருதாம்**

நாசமற்றவள். பகவானுக்கு அமுதம் போல் இனிமையாயிருப்பவள். 35

**தீப்தாம்**

ஆதலால் மிகவும் பிரகாசிப்பவள். 36

**லோகசோகவிநாசினீம்**

உலகத்தாரின் துக்கங்களை அடியோடு அழிப்பவள். 37

**தர்மநிலயாம்**

எல்லா விதமான தர்மங்களுக்கு, இருப்பிடமானவள். 38

**கருணாம்**

தயை அதிகமாயிருப்பதனால் இவள் தயாஸ்வரூபமாயிருப்பவள், 39

**லோகமாதரம்**

உலகங்களுக்கெல்லாம் தாயார். 'வேதமாதரம் " என்ற பாடத்தில் வேதத்துக்குத் தாயாயிருப்பவள் . ஸ்ருஷ்டிகாலத்தில் பகவானுடனிருந்து வேதங்களை வெளிப்படுத்துமவள்- என்றபடி. 40

**பத்மப்ரியாம்**

தாமரையைத் தனக்குப் பிரியமான வாஸஸ்தானமாக உடையவள். தாமரையில் ப்ரீதியுடையவள். தாமரைப்பூ லக்ஷ்மிக்குப் பிரியமானது என்று சொல்லியிருக்கிறது. 41

**பத்மஹஸ்தாம்**

தாமரையைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவள். 42

**பத்மாக்ஷீம்**

தாமரைபோல் குளிர்ந்த அழகிய திருக்கண்களையுடையவள். 43

**பத்மஸுந்தரீம்**

தாமரைபோல் அழகியவள். 44

**பத்மோத்பவாம்**

தாமரையினின்றும் உண்டானவள். 45

**பத்மமுகீம்**

தாமரைபோல் ஆனந்தத்தை அளிக்கும் திருமுகமண்டலத்தை உடையவள். 46

**பத்மநாபப்ரியாம்**

திருநாபியில் தாமரையையுடைய நாராயணனுக்கு அநவரதமும் ப்ரீதியையளிப்பவள்.

**ரமாம்**

பகவானுடன் எப்போதும் கிரீடிப்பவள். எல்லாரையும் ஸந்தோஷப்படுத்துபவள். 48

**பத்மமாலாதராம்**

தாமரை மாலையைத் தரிப்பவள். 'தந்மத்யே கர்ணிகயாம் ஸ்ரீ:ஸம்ஸ்திதா பத்மமாலிநீ, தீப்தா சதுர்புஜா பத்ரா ஸா மே தேவீ ப்ரஸீதது " (தாமரையின் நடுவிலுள்ள காயில் தாமரை மாலையைத் தரித்து நான்கு திருக்கைகளுடன் விளங்கும் மங்களகரியான லக்ஷ்மி எனக்குப் ப்ரஸந்நமாகட்டும்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. 49

**தேவீம்**

ஜதத் ஸ்ருஷ்டி, நர்மலீலை முதலியவைகளால் பகவானுடன் விளையாடுபவள். 50

**பத்மினீம்**

பத்மினீ என்ற உத்தமஜாதி ஸ்திரீ ஜனங்களுக்கு அபிமானியானவள். 51

**பத்மகந்திநீம்**

தனது திருமேனியில் தாமரைப்பூவின் வாஸனையையுடையவள். 52

**புண்யகந்தாம்**

புண்யத்தைச் செய்யும் வாஸனையையுடையவள். 53

**ஸுப்ரஸந்நாம்**

ஆச்ரிதர்களிடத்தில் மிகுந்த ப்ரஸாதமுடையவள். 54

**ப்ரஸாதாபிமுகீம்**

ஆச்ரிதர்களுக்கு அநுக்ரஹம் செய்வதிலேயே நோக்காயிருப்பவள். 55

**ப்ரபாம்**

ஸுரியனுக்குப் பிரபை போல் எம்பெருமானுக்கு அகலகில்லாத பிரபை போலிருப்பவள். ஸுரியனுடைய பிரபை லக்ஷ்மி என்றும் சொல்லலாம். "மைத்ரேய! கேசவஸ்ஸுர்ய: தத் ப்ரபா கமலாலயா" (எம்பேருமான் ஸுர்யன், அவனது பிரபை பிராட்டி" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லியிருக்கிறது. 56

**சந்த்ரவதநாம்**

சந்திரன் போன்ற திருமுகமண்டலத்தை யுடையவள். "சந்த்ரநிலயாம்" என்ற பாடத்தில் சந்திரனிடத்தில் வசிப்பவள் என்பது பொருள். 57

**சந்த்ராம்**

நிரதிசயமான ஆனந்தஸ்வரூபியாயிருப்பவள். அதாவது ஆனந்தத்தை ஸ்வரூபமாகவும் குணமாகவுமுடையவள். ஆனந்தமயமான திருமேனியையுடையவள் என்றபடி. எல்லாரையும் ஸந்தோஷப்படுத்துபவள். ஸம்ஸாரத்தில் தாபத்ரயங்களால் அடிபட்டு தன்னை அடைவதற்கு வரும் ஸகலரையும் ஸந்தோஷப்படுத்துபவள். "பூர்வகர்மாநவார்த்தாநாம் த்யாயிநாம் கேதசாந்தயே, ஸ்வவக்த்ரேந்து கலோத்தேந ஹ்லாதயந் கோகணேந து" (தனது முகமாகிற சந்திரகலையினின்றுமுண்டான கிரணங்களால், பூர்வகர்மங்களாகிய நெருப்பினால் தஹிக்கப்பட்டு தன்னைத் தியானம் செய்யுமவர்களின் தாபத்தைப் போக்கி ஸந்தோஷிப்பிக்கிறாள்) என்று ஸாத்வத ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறது. 58

**சந்த்ரஸஹோதரீம்**

திருப்பாற்கடலைக் கடைந்த சமயத்தில் சந்திரனுக்கு உடன் பிறந்தவளாக அவதரித்தவள். 59

**சதுர்புஜாம்**

நான்கு திருத்தோள்களை யுடையவள். 60

**சந்த்ரரூபாம்**

சந்திரன் போல் ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடிய திருமேனியையுடையவள். 61

**இந்திராம்**

பரமைச்வர்யமுள்ளவள். 62

**இந்துசீதளாம்**

சந்திரன் போல் குளிர்ந்தவள். 63

**ஆஹ்லாதஜனனீம்**

தன்னை உபாஸிப்பவர்களுக்கு எப்போதும் ஆநந்தத்தை உண்டுபண்ணுபவள். 64

**புஷ்டிம்**

தன்னைப் பூஜிப்பவர்களைப் போஷிப்பவள். 65

**சிவாம்**

மங்கள ஸ்வரூபமானவள். 66

**சிவகரீம்**

ஆச்ரிதர்களுக்கு மங்களத்தைச் செய்பவள். 67

**ஸதீம்**

மஹாபதிவ்ரதை. மிகவும் ச்ரேஷ்டையானவள். 68

**விமலாம்**

ஒரு விததோஷமுமின்றி பரிசுத்தையானவள். 69

**விச்வஜனனீம்**

உலகத்துக்குத் தாயாயிருப்பவள். 70

**புஷ்டிம்**

நிறைவுக்கு அபிமாநி தேவதையாக இருப்பவள். "துஷ்டிம் என்று பாடாந்தரம். "தோஷயாமி குணைர் விஷ்ணும் துஷ்யாமி ச ஹரைர் குணை: ,
மயி துஷ்டிஸ் ஸமஸ்தாநாமீடிதாயாம் ஸ்வகர்மபி:, துஷ்டிர் நிரூபிதா தேந ஸா அஹம் யோகாப்தி பாரகை:" (என்று குணங்களால் விஷ்ணுவை ஸந்தோஷிக்கச் செய்கிறேன்; அவரது கல்யாணகுணங்களால் நான் ஸந்தோஷப்படுகிறேன். என்னைத் துதி செய்யும் ஸர்வருக்கும் ஸந்தோஷம் பெருகும். ஆதலால் யோகமென்னும கரையைக் கண்டவர்களால் நான் 'துஷ்டி' என்று சொல்லப்படுகிறேன்) என்று லக்ஷ்மீதந்திரத்தில் சொல்லியபடி பொருள் கொள்ளவும். 71

**தாரித்ர்யநாசிநீம்**

ஆச்ரிதர்களின் தாரித்ர்யத்தை நாசம் செய்பவள். "தேவ்யா: ஸம்ஸ்ருதி மாத்ரேண தாரித்ர்யம் யாதி பஸ்மஸாத்" (லக்ஷ்மீதேவியை நினைத்தமாத்திரத்தில் தாரித்ர்யம் நசித்து விடும்) என்று ப்ரம்மபுராணத்தில் சொல்லியிருக்கிறது. 72

**ப்ரீதிபுஷ்கரிணீம்**

தாமரையோடையில் ப்ரீதியுடையவள். "ப்ரீதபுஷ்கரிணீம்" என்ற பாடத்திலும் இதுவே பொருள். 73

**சாந்தாம்**

சாந்தி என்ற குணமுடையவள். 74

**சுக்லமால்யாம்பராம்**

வெண்மையான மாலை, வஸ்திரம் இவைகளை உடையவள். 75

**ஸ்ரீயம்**

ஒன்றோடு எதைச் சேர்ப்பதால் மற்றவைகளைக் காட்டிலும் இது மேலானது என்ற புத்தி உண்டாகிறதோ, அந்தப் பதமே உனது திருநாமம் என்ற
அபிப்பிராயத்தால் "ஸ்ரீரித்யேவ ச நாம தே" என்று ஆளவந்தார் அருளிச் செய்தார்,

ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் ஸ்ரீசப்தத்துக்கு ஆறுவிதமான அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

1, ஸ்ரீயதே- மோக்ஷத்தை விரும்பும் எல்லாராலும் ஆச்ரயிக்கப்படுகிறாள். எம்பெருமானுடைய கட்டாளையை மீறி நடந்து அதனால் குற்றவாளிகளான சேதனர்கள் எம்பெருமானை அணுகுவதற்குப் பயந்து, அநுக்ரஹமே ஸ்வபாவமாயிருக்கும் லக்ஷ்மியைச் சரணமாக ஆச்ரயிக்கிறபடியால் அவளுக்கு ஸ்ரீ என்று பெயர்.

2. ச்ரயதே - எம்பெருமானை ஆச்ரயித்திருக்கிறாள். அப்படித் தன்னைஆச்ரயிக்கும் தீனர்களான சேதனர்களைப் பார்த்து நெஞ்சுருகி "இவர்களை தண்டிக்கக்கூடாது. காப்பாற்றவேண்டும்" என்று எம்பெருமானை ஆச்ரயித்து பிரார்த்திக்கிறபடியால் அவளுக்கு ஸ்ரீ: என்று பெயர்.

3. ச்ருணோதி - கேட்கிறவள்.

4. ச்ராவயதி - கேட்பிக்கிறவள். இந்த அர்த்தங்களில் மூன்று பிரகாரம் - 1." அபராதம் பண்ணிய அடியோங்களை ஸர்வேச்வரன் திருவடிகளில் சேர்த்தருள வேண்டும்" என்ற ஆச்ரிதர்களின் வருத்தக் குரலைக் கேட்பவள்; இதை எம்பெருமானைக் கேட்கச் செய்கிறவள்.

2. "ப்ரப்த்தி செய்தவனை ரக்ஷிப்பேன் " என்று எம்பெருமான் சொன்னதை அவன் பக்கலிலேயே கேட்கிறவள்; ஸமயம் வந்தபோது அந்த வார்த்தையை எம்பெருமானைக் கேட்பிப்பவள்.

3. உலகத்தாருக்கு எது ஹிதம் என்று எம்பெருமான் பக்கலிலே கேட்பவள்; அதை ராவணன் போன்ற விபரீதரையும் கேட்பிக்கிறவள். "ஏ ராவணா! நீ மரணமடையாமல் இலங்கையில் வாழ விரும்பினால், புருஷோத்தமனான ஸ்ரீராமனை நண்பனாகப் பண்ணிக்கொள்ளுவது தகுந்தது" என்று ஸ்ரீ ஸீதை ராவணனைக் குறித்துச் சொன்னாள்.

5. ச்ருணாதி - எல்லாப் பாபகர்மங்களையும் நாசம் செய்கிறவள். உபய விரோதி என்றும் ப்ராபய விரோதி என்றும் கர்மங்கள் இரண்டு விதம். பகவானிடத்தில் பக்தி, ப்ரபத்தியை செய்யவொட்டாமல் செய்கிற கர்மம் உபாயவிரோதி; பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையடையவொட்டாமல் தடுக்கிற கர்மம் ப்ராப்யவிரோதி. இந்த இரண்டுவித கர்மங்களையும் போக்குபவள்.

6. ச்ரீணாதி- பரிபாகத்தை உண்டாக்குகிறவள். தம்முடைய ஆச்ரிதம் முதலான குணங்களால் ஆச்ரிதர்களுக்கு நித்யகைங்கர்யமளவான குணபரிபாகத்தை யுண்டாக்குமவள். எல்லாராலும் அடையத் தகுந்தவள்.

சிலர் "சுக்லமால்யாம்பராம் ச்ரியம்" என்று ஒரே நாமமாகப் பாடம் கொள்ளுவார்கள். வெளுத்த மாலை வஸ்திரங்களாகிற ஸம்பத்தையுடையவள் என்று பொருள். 76

**பாஸ்கரீம்**

தன்னையடைந்த பக்தர்களுக்கு தேஜஸைக் கொடுப்பவள். 77

**பில்வநிலயாம்**

பில்வ விருக்ஷத்தை இருப்பிடமாகவுடையவள். "வநஸ்பதிஸ்தவ வ்ருக்ஷோ அத பில்வ:" என்ற ஸ்ரீஸூக்தத்தைக் காண்க. 78

**வராரோஹாம்**

வரனான பகவானது திருமார்பில் ஏறியவள். உத்தமஸ்த்ரீக்கு "வராரோஹா" என்று பெயர் என்று அமரம். சிரேஷ்டமான இடுப்பையுடையவள் என்பது பொருள். 79

**யசஸ்வினீம்**

விசேஷமான கீர்த்தியையுடையவள். "யசஸா ஜ்வலந்தீம்" என்று ஸ்ரீஸூக்தம். 80

**வஸுந்தராம்**

ஆச்ரிதர்களுக்குக் கொடுப்பதற்காக சம்பத்தை தரிப்பவள். 81

**உதாராங்காம்**

திருமாலுக்கு எப்போதும் ஆனந்தத்தையளிக்கும் திருமேனியையுடையவள் 82

**ஹரிணீம்**

ஸர்வபாபங்களையும் அபஹரிக்கும் ஸ்வபாவமுடையவள். "ஸர்வபாபக்ஷயப்ரதாம் பாபஹாரிணீம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கண்ணழகில் மான்பேடையையொத்தவள் என்றும் சொல்லலாம். 83

**ஹேமமாலினீம்**

ஸுவர்ணமயமான மாலையை யணிந்து விளங்குபவள். 84

தநதாந்யகரீம்

ஆச்ரிதர்களுக்குத் தநத்தையும், தான்யங்களையும் உண்டுபண்ணுபவள். 85

**ஸித்திம்**

ஸர்வஸித்தி ஸ்வரூபமானவள். அணிமை முதலிய எட்டு ஸித்திகளைக் கொடுப்பதால் ஸித்தியாயிருக்கிறவள் என்றும் சொல்லலாம். 86

**ஸ்த்ரைணஸௌம்யாம்**

ஸ்த்ரீ ஸமூஹங்களுக்குள் அழகியவள். 87

**சுபப்ரதாம்**

சுபத்தையே கொடுப்பவள். 88

**ந்ருபவேச்மகதாநந்தாம்**

ராஜக்ருஹத்தை அடைந்த ஆன்ந்த ஸ்வரூபமானவள். 89

**வரலக்ஷ்மீம்**

வரலக்ஷ்மி என்ற அவதாரம் செய்தவள். (ச்ராவண மாதத்தில் பௌர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக்கிஹமையில் வரலக்ஷ்மி வ்ரதம் செய்வார்கள். அதன் முறையை கல்ப மஞ்ஜரீ முதலிய கிரந்தங்களில கண்டு கொள்க.) 90

**வஸுப்ரதாம்**

ஆச்ரிதர்களுக்கு விரும்பியபடி தந, தாந்ய ஸம்பத்துகளை உண்டுபண்ணுபவள். 91

**சுபாம்**

எல்லா சுபங்களையும் செய்பவளாகையால் சோபனையானவள். 92

**ஹிரண்யப்ராகாராம்**

தங்கமயமான ப்ராகாரத்தை யுடையவள். நாநாரத்நங்களிழைத்த தங்கமயமான ப்ராகாரங்களில் சூழப்பட்ட ஆநந்தமயமான மண்டபத்தில் எழுந்தருளியிருப்பவள் என்றபடி

**ஸமுத்ரதநயாம்**

ஸமுத்ரராஜனின் திருமகள். 94

**ஜயாம்**

ஸர்வவிதமான ஜயங்களுக்கும் காரணபூதையானவள். 95

**மங்களாம் தேவீம்**

"மங்களாயை தேவ்யை நம:" என்று நாமத்தில் சொல்லவேண்டும். அடைந்தவர்களுக்கு கொடுக்கும் தேவி, 96

**விஷ்ணுவக்ஷஸ்தலஸ்திதாம்**

ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருமார்பில் நித்தியமாய் வீற்றிருப்பவள். 97

**விஷ்ணுபத்னீம்**

ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பத்நி. 98

**ப்ரஸந்நாக்ஷீம்**

அநுக்ரஹத்தோடு கூடிய திருக்கண்களையுடையவள். 99

**நாராயணஸமாச்ரிதாம்**

ஸ்ரீநாராயணனை விட்டு ஒருபோதும் பிரியாமல் அவரை ஆச்ரயித்தவள். 100

**தாரித்ர்யத்வம்ஸினீம்**

தாரித்ர்யத்தை நாசம் செய்பவள். 101

**தேவீம்**

"ப்ரதாத்ரீ ஸர்வகாமாநாம் அவித்ரீ ஸர்வகர்மணாம், தேவஸ்ய தயிதா சாஸ்மி தேவீம் மாம் முநயோ விது:" என்பது லக்ஷ்மீ தந்த்ர வாதம். (ஸர்வேஷ்டங்களையும் அளிப்பவள், ஸர்வ கர்மங்களையும் காப்பவள், வாஸுதேவனுக்குப் பிரிய பத்நி, ஆதலல் என்னை "தேவீ" என்று ருஷிகள் சொல்லுகிறார்கள். 102

**ஸர்வ உபத்ரவவாரிணீம்**

எல்லா உபத்ரவங்களையும் விலக்கிக் காப்பவள். 103

**நவதுர்க்காம்**

ஒன்பது துர்க்கைகளுக்கும் அந்தராத்மாவாயிருந்து அபிமானித்து அவர்களுக்கு வேண்டும் சக்திகளைக் கொடுப்பவள், 1, குமாரிகை, 2, த்ரிமூர்த்தி, 3, கல்யாணி, 4, ரோஹிணி, 5, காளீ, 6, சண்டிகை 7, சாம்பவீ, 8, துர்கை, 9, பத்ரா என்று ஒன்பது துர்க்கைகளுக்கும் பெயர். "மந்த்ராக்ஷரமயீம் லக்ஷ்மீம் மாத்ரூணாம் ரூபதாரிணீம், நவதுர்க்காத்மிகாம் ஸாக்ஷாத் கந்யாமாவாஹயாம்யஹம்" என்று நிர்ணயஸிந்துவில் லக்ஷ்மியை நவதுர்க்காத்மிகையாகச் சொல்லியிருக்கிறது. 104

**மஹாகாளீம்**

மஹாகாளிக்கும் அந்தராத்மாவாயிருந்து அவளை நிர்வஹிப்பவள். அவள் ஐந்து முகம் எட்டுக் கைகளுடன் கூடியவள். பராசக்தியின் தாமஸீ சக்தி மஹாகாளி என்பார்கள்.

**ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம்**

த்ரிமூர்த்தி ஸ்வரூமாயிருப்பவள். 106

**த்ரிகாலஞானஸம்பந்நாம்**

முக்காலத்தை அறியும் ஞானத்துடன் கூடியவள். 107

**புவநேச்வரீம்**

சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சங்கள் எல்லாவற்றையும் நியமிக்கிறவள். 108

இப்படியிருக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மியை நமஸ்கரிக்கிறேன் - என்று ஒவ்வொரு திருநாமத்திலும் சேர்த்துக்கொள்ளவும்.

லக்ஷ்மி, திருப்பாற்கடலின் திருமகள், ஸ்ரீரங்கம் என்னும் திவ்ய தேசத்துக்கு ஈசுவரி, ஸமஸ்ததேவஸ்திரீகளையும் தனது பரிஜனங்களாகக் கொண்டவள், உலகத்தைப் பிரகாசம் செய்யும் தீபம் போன்றவள், மஹிமை பொருந்திய எவளின் அல்ப கடாக்ஷத்தினால் ப்ரம்மா, இந்திரன், கங்கையைத் தரிக்கும் சிவன் முதலானோர் தங்கள் தங்கள் ஐசுவரியத்தை

யடைந்தார்களோ, அப்படிப்பட்ட கடாக்ஷத்தையுடையவள், மூவுலகையும் குடும்பமாகவுடையவள், புக்தி, முக்தி ப்ரதனான விஷ்ணுவின் ப்ரிய பத்நி, இவ்வித மஹிமை பொருந்திய தாயாகிய லக்ஷ்மீ தேவியை நமஸ்கரிக்கிறேன்.

என் தாயாகிய கமலே! தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடையவளே! ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஹ்ருதயகமலத்தில் வசிப்பவளே! உலகங்களுக்குத் தாயே! திருப்பாற்கடலினின்றும் அவதரித்தவளே! தாமரை மலரின் அழகிய கர்ப்பரேணுபோல் பொன் வர்ணமுள்ளவளே! வணங்கினவர்களுக்கு எப்பொழுதும் ரக்ஷகையாயிருப்பவளே! லக்ஷ்மியே! உன்னை ஸேவிக்கிறேன். என்னிடத்தில் எப்போதும் அருள் புரிய வேண்டும்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் ஆயிரம் திருநாமங்களுள் புண்ணியமான இந்த நூற்றெட்டுத் திருநாமங்களையும் எந்த வித்வான், முயன்று இந்திரியங்களையடக்கி ஆறுமாதகாலம் மூன்று காலமும் ஜபிக்கிறானோ, அவன் தனது வறுமையை நீக்கி ஸகல ஸம்பத்துக்களையும் அநாயாஸமாக அடைகிறான். எந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அஷ்டோத்தர சத நாமத்தால் கோடி ஜந்மங்களில் துடர்ந்து வரும் தாரித்ர்யத்தை நீக்கி ஸகல ஸம்பத்தையும் அடைவானோ, அவ்விதமான அஷ்டோத்தர சத நாம ஸ்தோத்ரத்தை எந்தப் புத்திமான் வெள்ளிக்கிழமைதோறும் ஒரு வருஷம் படிப்பானோ, அவன் இப்பூமியில் குபேரன் போல் அஷ்டைச்வர்யத்தையும் அடைவான். எந்த ஸ்தோத்ரத்தால் அநேக ஜன்ம தாரித்ர்யத்தைப் போக்கி ஸம்பத்தை அடைவானோ, இங்கு ஸகல போகங்களையும் அநுபவித்து, இலக்ஷ்மியின் ஸாயுஜ்யத்தையும் அடைவானோ, வறுமையைப் போக்கும் சக்தி வாய்ந்த லக்ஷ்மீ விஷயமான இந்த ஸ்தோத்ரத்தை ஸகல துக்கங்களையும் போக்குவதற்காக தினந்தோறும் விடியற்காலையில் படிக்க வேண்டும். படிக்கும்போது ஸர்வாபரணபூஷிதையான ஸ்ரீ மஹாலக்ஷ்மியைச் சிந்திக்கக் கடவன்.